மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
**கல்விப்பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)பரீட்சை-2025**
மூன்றாம் தவணைப் பரீட்சை

| வரலாறு - I | | 33 T I | ஒருமணித்தியாலம் |
|---|---|---|---|

**அறிவுறுத்தல் :**

- ❖ **எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.**
- ❖ ***1* தொடக்கம் *40* வரையுள்ளவினாக்கள் ஒவ்வொன்றிலும் *(1), (2), (3), (4)* என இலக்கமிடப்பட்டவிடைகளின் சரியானஅல்லதுமிகப் பொருதத்மானவிடையைத் தெரிவுசெய்க.**
- ❖ **உமக்குவழங்கப்பட்டுள்ளவிடைத்தாளில் ஒவ்வொருவினாவுக்கும் உரியவட்டங்களில் உமதுவிடையின் இலக்கத்தைஒத்தவட்டத்தினுள்ளேபுள்ளடியை (✕) இடுக.**
- ❖ **அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ளமற்றையஅறிவுறுத்தல்களையும் கவனமாகவாசித்துபின்பற்றுக.**

1. அநுராதபுர திக்சந்த செனவியா பிரிவேனாவில் வாழ்ந்த மகாநாமதேரரால் எழுதப்பட்ட இலங்கையின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகக் கூறுகின்ற நூல் எது?
   (1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) சூழவம்சம் (4) போதிவம்சம்

2. இலங்கையின் பௌத்த சாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்டுள்ள நூல் எது?
   (1) ராஜாவலிய (2) பூஜாவலிய (3) நிகாயசங்கிரஹய (4) சத்தர்மாலங்கார

3. முதலாம் விஜயபாகு மன்னனிற்கு உதவி செய்த சித்தாறும்பி புத்தநாயக என்னும் அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்ட பரிசுகள், சலுகைகள் பற்றிக் குறிப்பிடும் ஆவணமாக இருப்பது
   (1) சொரபொரவாவி தூண்கல்வெட்டு (2) கல்பொத்த கல்வெட்டு
   (3) வல்லிபுர பொற்சாசனம் (4) பனாகடுவசெப்புசாசனம்

4. இலங்கையின் குறைவறள் வலய நிலத்தினடியின் காணப்படும் இரணைமடுப் படிவு எனப்படும் களிமண்ணுடன் கூடிய சரளைக்கற் படிவுகள் நிலத்தினுள் புதைந்ததாகக் கருதப்படும் யுகம்
   (1) பிளைத்தோசீன் யுகம் (2) கேம்பிரியனுக்கு முற்பட்ட யுகம்
   (3) சிலூரியன் யுகம் (4) சினோசோயிக் யுகம்

5. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட "பிதுருங்கல" அமைந்துள்ள காலநிலை வலயத்தினைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.
   (1) தாழ்நில இடை உலர்வலயம் (2) வறள் வலயம்
   (3) மலைநாட்டு இடைஉலர் வலயம் (4) தாழ்நில உலர்வலயம்

6. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் மக்களால் கைவிடப்பட்ட குளங்களை அண்மித்துக் காணப்பட்ட கிராமங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.
   (1) நியம்கம (2) பட்டானகம (3) ஒலகம் (4) பரிகித்தகம

7. கி.மு. 700 - 450 காலகட்டத்தில் இலங்கையின் "இபன்கட்டுவ" பகுதியில் கண்டறியப்பட்ட கல்லறைமயானத்தினைப் பயன்படுத்தியவர்களாகக் கருதப்படுபவர்கள்

(1) கமிக (2) பருமகர்கள் (3) மன்னர்கள் (4) குர்க்கபதி

8. புராதனகாலத்தில் இலங்கையின் வடபகுதியை நாகதீப (நகதிவ) என அழைத்து அதனை நிர்வகிப்பதற்கு அதிகாரிகளை நியமித்த அநுராதபுர ஆட்சியாளன்
(1) துட்டகைமுனு (2) பண்டுகாபயன் (3) வசபன் (4) தாதுசேனன்

9. கீழே நிரல் I இல் அரச சபையில் இருந்த அமைச்சர்களின் பெயர்களும் நிரல் II இல் அவர்களுடைய பணிகளும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்பு படுத்தும் போது கிடைக்கின்ற சரியான விடைத் தொகுதி எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. படகரிக | A - நாட்டியப் பிரிவின் தலைவர் |
| 2. நட அதெக | B - நாகர கட்டட நிர்மாணி |
| 3. நகரவடிக | C - நாட்டினைப் பாதுகாத்தல் |
| | D - நாட்டின் பொருளாதார விடயங்கள் |

(1) D C A (2) D B A (3) D A B (4) D A C

10. "குபேரக் கடவுளாகத்" தன்னைக் கருதிக் கொண்ட மன்னன்
(1) மகாசேனன் (2) முதலாம் காசியப்பன்
(3) நிஸ்ஸங்கமல்லன் (4) குட்டகண்ண அபயன்

11. ஜின்கங்கைக் கழிமுகத்தில் அமைந்திருந்த புராதன துறைமுகம்
(1) கோகண்ணதித்த (2) மகாதித்த (3) கிம்ஹதித்த (4) சுகரதித்த

12. புராதன காலத்தில் அநுராதபுரத்தின் தெற்கு வாயிலில் அமைந்திருந்த சந்தைக்கு வழங்கப்பட்ட பெயர்
(1) காலசுமண (2) வணிஜ
(3) ஆம்ல (4) ஹோப்பிடிகம

13. ஆலாஹான பிரிவேனாவில் கண்டெடுக்கப்பட்ட சிதைவுகள் மூலம் நாம் அறிந்துகொள்ளக் கூடிய விடயம் யாது?
(1) புராதன இலங்கையில் கலைத்துறையில் ஆர்வம் செலுத்திய மன்னர்கள் இருந்தனர் என்பது
(2) புராதன காலத்தில் இரும்புருக்குக் கைத்தொழில் வளர்ச்சியடைந்திருந்தது என்பது
(3) புராதன காலத்தில் வைத்தியத்துறை வளர்ச்சியடைந்திருந்தது என்பது
(4) புராதன காலத்தில் யானைத்தந்த கைத்தொழில் வளர்ச்சியடைந்திருந்தது என்பது

14. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பிறந்த இடமாகக் கருதப்படும் புங்ககாம என்ற இடத்தில் அமைக்கப்பட்ட விகாரை
(1) பலன விகாரை (2) ரிட்டிகல சைத்தியம் (3) தூபராம விகாரை (4) சூதிகர சைத்தியம்

15. இலங்கையில் நெல் மூன்று போகமும் பயிரிடப்பட்டதாகக் குறிப்பிடுகின்ற கல்வெட்டு
(1) தோணிகல கல்வெட்டு (2) கல்பொத்த கல்வெட்டு
(3) வேவல் கெட்டிய கல்வெட்டு (4) சொரபொரவாவி தூண்கல்வெட்டு

16. உயர் நிலங்களிலுள்ள இயற்கைக் காடுகளை அழிக்கக் கூடாது எனக் குறிப்பிடும் கல்வெட்டு

(1) அநுராதபுரக் கல்வெட்டு (2) மிகிந்தலைக் கல்வெட்டு
(3) வெஸ்ஸகிரியக் கல்வெட்டு (4) கொண்டவட்டவான் கல்வெட்டு

17. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த மானவர்மவம்சம் உதவியைப் பெற்றுக் கொண்ட இந்தியப் பேரரசு
(1) சோழப் பேரரசு (2) கலிங்கப் பேரரசு
(3) பல்லவப் பேரரசு (4) பாண்டியப் பேரரசு

18. வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட சில வரிகள் நிரல் I இலும் அவ்வரிகள் அறவிடப்பட்ட துறைகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளது. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடரப்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. மதரமஞ்சக்கபதி | A - குளங்களிலிருந்து நீரைப் பெறுதல் |
| 2. போஜக்கபதி | B - வாய்க்காலில் மீன் பிடித்தல் |
| 3. தக்கபதி | C - அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்தல் |
| | D - வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தல் |

(1) C A B (2) BC A (3) C D A (4) C B D

19. உருகுணுரட்டையில் கோவிந்த மலையில் கோட்டைகட்டி, பாதுகாப்பு அரண் அமைத்திருந்த தளபதி
(1) சுபதளபதி (2) சங்க தளபதி
(3) புவனேகபாகு ஆதிபாதன் (4) சித்தாரும்பி புத்தநாயக்கா

20. தென்கிழக்காசியாவின் மலாயா குடாநாட்டில் இருந்து சந்திரபானுவின் படையெடுப்பு நிகழ்ந்த போது இலங்கையை ஆட்சிசெய்த மன்னன்
(1) மூன்றாம் விஜயபாகு (2) முதலாம் பராக்கிரமபாகு
(3) முதலாம் புவனேகபாகு (4) இரண்டாம் பராக்கிரமபாகு

21. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் பாதுகாவலராக அதன் தலைநகரத்திற்குச் சென்றதற்கான காரணம்
(1) கோட்டை, றைகம இராச்சியங்களுக்கிடையில் நிலவிய கருத்து வேறுபாடு
(2) கோட்டை, சீதவாக்கை இராச்சியங்களுக்கிடையில் நிலவிய கருத்து வேறுபாடு
(3) கோட்டை, கண்டி இராச்சியங்களுக்கிடையில் நிலவிய கருத்து வேறுபாடு
(4) கோட்டை, கம்பளை இராச்சியங்களுக்கிடையில் நிலவிய கருத்து வேறுபாடு

22. புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்தவர்
(1) ஐசாக் நியூட்டன் (2) பெரசல்சஸ்
(3) மைக்கல் சர்வேட்ஸ் (4) வில்லியம் ஹார்வே

23. கி.பி 1796 இல் பிரித்தானியர் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றும் போது கண்டி ஆட்சியாளன்

(1) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (2) இராஜாதி இராஜசிங்கன்
(3) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

➢ **பின்வரும் A, B என்ற கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 24 ஆம் வினா விற்கு விடை எழுதுக.**

A - வர்த்தக வளர்ச்சி

B - செல்வந்தர்களின் உருவாக்கம்

24. 18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமை தொடர்பில்
(1) Aயும் Bயும் சரியானவை
(2) Aயும் Bயும் பிழையானவை
(3) A சரியானது என்பதோடு B பிழையானது
(4) A பிழையானது என்பதோடு B சரியானது

25. நெசவுக் கைத்தொழிலில் மென்மையானதும், உறுதிவாய்ந்ததுமான நூலை உற்பத்தி செய்வதற்குக் காரணமான கண்டுபிடிப்பு
(1) ஜெனி இயந்திரம்
(2) பறக்கும் நூனாளி
(3) மியூல் இயந்திரம்
(4) நீர்ச்சக்கரம்

26. பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்குக் அனுப்பப்பட்ட கியூ கடிதத்தைப் பெற்றுக் கொண்ட ஒல்லாந்த ஆளுநர்
(1) பன்எங்கல்பெக் (2) பெரன்வென்எக் (3) வில்லியம்கோஸ்ரர் (4) வன்கூன்ஸ்

27. இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்த ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் கம்பனியின் பிரதான நோக்கம்
(1) கரையோர மக்களின் கல்வி அபிவிருத்தி
(2) கரையோர மக்களின் சுகாதார அபிவிருத்தி
(3) கரையோரப் பிரதேசத்திலிருந்து இயன்றளவு இலாபத்தினைப் பெற்றுக் கொள்வது
(4) கரையோரப் பிரதேசத்தைச் சுற்றுலா மையமாக மாற்றுவது

28. கி.பி 1919 இலங்கைத் தேசிய சங்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டவர்
(1) சேர். பொன் இராமநாதன் (2) சேர். பொன். அருணாசலம்
(3) சேர். பொன்.முத்துக்குமாரசாமி (4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

29. பௌத்த பிரம்மஞான சங்கத்தின் பிரதான நோக்கம்
(1) பௌத்த மாணவர்களுக்கான பௌத்த பாடசாலைகளை ஆரம்பிப்பது
(2) போயா தினத்தினை விடுமுறை தினமாக மாற்றுவது
(3) துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுவது
(4) கிறிஸ்தவ மிஷனரிகளுடன் விவாதங்களில் ஈடுபடுவது

➢ **பின்வரும் A தொடக்கம் E வரையிலான கூற்றுக்களை நன்கு வாசித்து 30 ஆம், 31 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - கந்தபுராணத்தினை செய்யுள், வசன நடையில் பிரசுரம் செய்தமை

B - முஸ்லீம் நேசன் பத்திரிகையை வெளியிட்டமை

C - கொழும்பு சாகிராக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியமை

D - சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தமை

E - முஸ்லீம் கல்விச்சபை தோற்றுவிக்கப்பட்டமை

30. ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய நிகழ்வுகளைத் தருகின்ற விடைகள் எவை?

(1) B, E (2) A, D (3) B, D (4) A, C

31. M. C சித்திலெப்பை யுடன் தொடர்புடைய நிகழ்வுகளைத் தருகின்ற விடைகள் எவை?

(1) C, E (2) B, A (3) B, E (4) B, C

32. கோல்புறூக் இலங்கை வரும் போது நிலவிய பொருளாதார முறைக்கேற்ப அரசின் ஏகபோக வர்த்தக உரிமைக்குரியதாகக் காணப்பட்ட பொருட்கள்

(1) கறுவா, உப்பு (2) மீன், கருவாடு

(3) இரத்தினக்கற்கள், முத்து (4) யானை, யானைத்தந்தம்

33. இலங்கை (லங்கா) எனப்பட்ட நாடு ஸ்ரீலங்கா என அழைக்கப்படுவதற்குக் காரணமான அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

(1) சோல்பெரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

(2) 1972 முதலாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்

(3) 1978 இன் 13 ஆம் இலக்க சீர்திருத்தம்

(4) 1978 இரண்டாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்

34. இலங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அகலவத்தை அமைந்துள்ள மாவட்டம்

(1) கண்டி (2) நுவரெலியா (3) இரத்தினபுரி (4) களுத்துறை

35. உயர் கல்வித் துறையின் விருத்திக்காக வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்தப்பட்ட போது இந்நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தவர்

(1) D. S. சேனாநாயக்கா (2) ஜோன் கொத்தலாவல

(3) S. W. R. D.பண்டாரநாயக்கா (4) டட்லிசேனாநாயக்கா

36. "பொஸ்டன் தேநீர் விருந்து" என்ற கூற்றுடன் தொடர்புடைய புரட்சி

(1) ஆங்கிலப் புரட்சி (2) அமெரிக்கப் புரட்சி

(3) பிரான்சியப் புரட்சி (4) ரஷ்யப் புரட்சி

37. பிரான்சியப் புரட்சியின் ஆரம்பமாகக் கருதப்பட்ட விடயம்

(1) டெனிஸ் மைதான உறுதிமொழி முன்வைக்கப்பட்டமை

(2) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டமை

(3) சட்டத்தின் சாரம் என்ற நூல் வெளியிடப்பட்டமை

(4) பஸ்டில் சிறைச்சாலை தாக்கப்பட்டமை

➢ **கீழே A, B எனத் தரப்பட்ட கூற்றுக்களை அவதானித்து 38 ஆம், 39 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசனின் கொலை

B - ஹிட்லர் போலந்தைத் தாக்கியமை

38. இரண்டாம் உலகயுத்தத்திற்கான உடனடிக் காரணம்
(1) A சரியானது என்பதோடு B பிழையானது
(2) A பிழையானது என்பதோடு Bசரியானது
(3) A யும் B யும் சரியானவை
(4) A யும் B யும் பிழையானவை

39. முதலாம் உலக யுத்தத்திற்கான உடனடிக் காரணம்

(1) A யும் B யும் பிழையானவை
(2) A சரியானது என்பதோடு B பிழையானது
(3) A யும் B யும் சரியானவை
(4) A பிழையானது என்பதோடு B சரியானது

40. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாடும் நகரமும்
(1) நெதர்லாந் - ஹேக் (2) பிரித்தானியா – லண்டன்
(3) ஜேர்மனி – மியுனிச் (4) ஐக்கிய அமெரிக்கா – நியுயோர்க்

*(40 x 2 = 80 புள்ளிகள்)*